தமிழர் அபிலாஷைகள் பூர்த்தியாக வேண்டும்!

— ஹமீத் கருத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அரசியல் வேறுபாடுகளை மறந்து தேசியக் கட்சிகள் முன்வரவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இதற்குள் எம்மை எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதாவது வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு உடனே தீர்வு காணப்படவேண்டும்.

எமது நாட்டில் அமைதி நிலவி, பொருளாதார வளர்ச்சி

(3-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 28 இதழ் 90
யாழ்ப்பாணம் புதன்கிழமை 11-5-1994

சிறிசேன கூரே மீது சி.ஐ.டி. நோட்டம்

(கொழும்பு)

மத்திய மலையக பகுதியில் தனது ஓய்வு இல்லத்திற்கு சென்றுள்ள அமைச்சர் சிறிசேன கூரேயின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக சி. ஐ. டி. பொலிஸார் அவரைப் பின் தொடர்ந்து சென்றுள்ளனராம்.

ஜனாதிபதியை பதவியிழக்க திரு. சிறிசேனகூரே இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

★ ஐ. தே. க.வின் உட்பூசல் வெடிப்பு:

ஜனாதிபதியை கொல்வதற்கான சதி முயற்சி கண்டுபிடிப்பு!

சிங்கள பத்திரிகை தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைக் கொலைசெய்வதற்கான சதி முயற்சி ஒன்றை இரகசியப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாக 'ஹிரு' என்ற சிங்களப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

'ராவய' செய்திக்கு சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியை பதவியிலிருந்து கவிழ்க்க தாமும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும் சேர்ந்து சதியில் ஈடுபட்டுள்ளதாக 'ராவய' பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து அதன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக

(4-ம் பக்கம் பார்க்க)

காமினியை எம். பி.யாக்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது

(கொழும்பு)

திரு. காமினி திஸாநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற எம். பி யாக்கும் முயற்சி ஒன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது.

[illegible]

ஐ. தே. கவின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக்காலை ஐ. தே. கவின் பொதுச்செயலர்

(4-ம் பக்கம் பார்க்க)

ஐ.தே.க. மேயர் மீது ஜனாதிபதி சீற்றம்

(கொழும்பு)

ஐ.தே.க.வைச் சேர்ந்த நகர மேயர் ஒருவர் ஜனாதிபதி விஜேதுங்கவின் கடும் சீற்றத்துக்கு உள்ளாகவுள்ளார்.

ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் எவரும் தனது அனுமதியின்றி வெளிநாடுகளுக்கு செல்லக் கூடாதென ஜனாதிபதி உத்தர

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கைப் பிரிக்கும் முயற்சிக்கு எதிராகபிரேரணை

மட்டக்களப்பு மாநகரசபையில் வருகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரிக்கும் முயற்சிக்கு எதிராகவும் தொடர்ந்து ஒரே நிர்வாக அலகாக வடக்கு கிழக்கு மாகாணம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் விரைவில் ஒருபிரேரணை மட்டு மாநகரசபையில் கொண்டு வரப்போவதாக மேஜர் செழியன் பேரின்ப

(4 ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. எம்.பி.க்கள் சட்ட ஆலோசனை

(கொழும்பு)

ஐ. தே. கவின் தேசிய பட்டியல் மூலம் தெரிவான பல எம். பிக்கள் சட்ட ஆலோசனையை நாடியுள்ளனராம்.

தம்மை பலவந்தமாக எம். பி. பதவியிலிருந்து நீக்கம் செய்வதை தடுப்பதற்காகவே இவர்கள் சட்ட ஆலோசனை

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு மேல் எதையும் வழங்கிட முடியாது

ஜே. ஆர். கருத்து

(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ளவற்றிற்கு மேல் எதையும் எந்த ஒரு தேசிய அரசாங்கத்தினாலும் வழங்கிவிட முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் குறித்து பத்திரிகையாளரால் கேட்கப்பட்ட கேள்வி யொன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; இதைவிட

(4-ம் பக்கம் பார்க்க)

சொத்தி உபாலி செய்தி வெறும் கேலிக்கூத்து

(கொழும்பு)

சொத்தி உபாலி என்ற நபர் பற்றி பத்திரிகைக்குத் தருமாறு பொலிஸ் தலைமை அலுவலகம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை வெறும் கேலிக்கூத்து என பொதுமக்கள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் குறிப்பிட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

குண்டு வெடிப்பினால் 200 தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பு குண்டு வெடிப்பு தொடர்பாக இதுவரை கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் 200க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பின் பின் படையினர் கொழும்பிலிருந்து

(4ம் பக்கம் பார்க்க)

கிளாலி -பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன் கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் கடற்படைத் துறையினர் அறிவித்துள்ளனர்.

தலா 25,000 ரூபா பெறுமதியான 400 பொதிகளுக்கு என்ன நடந்தது?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலமான போது அவருடைய வாசஸ்தலமான 'சுசரித்' இல்லத்தில் தலா 25 ஆயிரம் ரூபா நிரப்பப்பட்ட 400 பொதிகள் சாட்சிகள் முன்னிலையில் அப்போதிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

அராலியூர்
ந. சுந்தரம்பிள்ளை

250 நாடகங்கள் எழுதிய அராலியூரின் நாவல் அக்கரைச்சீமையில் 50/- இங்கிலாந்து சென்ற எங்கள் குமரன் குமரியை சுவையான நடை. எங்கும் கிடைக்கும்.

(இ-994)

மே 19. ராகு கேது மாற்றம்

ஜூலை 2 வரை வியாழ வக்கிரம். பெண்ணின் ருது ஜாதக பலன்களும் ரூ: 10/- எங்கும் கிடைக்கும். பூபாலசிங்கம் பாலாஜி புத்தகசாலைகள், யாழ்ப்பாணம்

(இ-1014)

பதவி மாற்றங்கள்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உயர் மட்டப் பதவிகளில் பல மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

முக்கியமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டு / தாபன பணிப்பாளர் சபைத் தலைவர், கூட்டுத்தாபனத் தலைவர் ஆகிய பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-இ)

இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் புதிய பணிமனைத் திறப்பு விழா இன்று 11ம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் திரு. பொ. ஜெயப்பிரகாசம் தலைமையில் சிவயோகசுவாமி ஆச்சிரமத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மன்றப் பணிமனையைத் திறந்து வைப்பார். யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் மன்ற பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வார். -154

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தினர் "வரவு மலர் வெளியீடு-94" என்ற நூல் செல்வன் எஸ். பாலகணேசன் தலைமையில் இன்று 11ம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மா. இளந்தம்பி கலந்து கொள்கிறார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

கல்வித்திணைக்களம் வலயம் 02க்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளின் முதன்மை விருந்தினராக கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமி கலந்து கொள்வார்.

0 0

(யாழ்ப்பாணம்)

மகரிஷி கவியோகி சுத்தானந்த பாரதியாரின் 97வது ஜயந்தி தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு மில்க்வைற் நிறுவனம் இன்று (11-5-94) மட்டும் சுவாமிகளின் மூவர்ணப் படம் அன்பளிப்பாக நேரில் வருபவர்களுக்கு வழங்குகிறார்கள்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சர்வமத மகாசபைப் பிரசங்க நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருநெல்வேலி ராமகிருஷ்ணமிஷன் மாணவர்களால் பாடசாலைகள் தோறும் நடத்திவரும் வீரத்துறவி [illegible] நிகழ்ச்சி இன்று புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் 12ந் திகதி வியாழக்கிழமை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

நினைவுச் சொற்பொழிவு

முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும் பேராசிரியருமான கலாநிதி எஸ். வித்தியானந்தனின் நினைவுச் சொற்பொழிவு கலாநிதி ஆ. ஜே. சோமசுந்தரத்தினால் "தன்னாத்மாவைத் தேடி அலையும் மனிதன்" என்ற தலைப்பில் இடம் பெறவுள்ளது.

இம்மாதம் 18ம் திகதி புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் இடம் பெறும்.

(ம)

கூரே - லக்கி சதிமுயற்சி; விசாரணைக்குழு நியமனம்?

(கொழும்பு)

அமைச்சர் சிறிசேன கூரேக்கும் மற்றும் சில இராணுவ அதிகாரிகளுக்குமிடையில் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதித்திட்டம் இருந்ததா என்பதைக் கண்டறிவதற்கு அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவை நியமிப்பதற்கு தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசைக் கவிழ்க்க ராணுவ சதிசெய்ததாக திட்டமிட்டே வதந்தி பரப்பப்பட்டதாகவும் இதில் எதுவித உண்மையும் இல்லையென அமைச்சர் கூரேயும் இராணுவத் தளபதி லக்கி அல்கமவும் உடனடியாக இதை மறுத்திருந்தனர்.

தனது வீடு, காணிகளை விற்று வெளிநாட்டுக்கு போவதற்கு ஆயத்தப்படும் கூரேயின் வெளிநாட்டுப் பயணம் இதனால் தடைப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை லலித் அத்துலத்முதலியின் கொலை பற்றி விசாரிப்பதற்கு சுதந்திரமான ஒரு ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ம-இ

பாதுகாப்பு வழங்க அரசு மறுக்கிறது

—சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரத் தலைவியுமான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தனக்கு எதிரிகள் கொலை பயமுறுத்தல் விடுத்திருந்தபோதும் தனக்கு எதுவித பாதுகாப்பும் வழங்கப்படாதது குறித்து அரசை குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒரு அமைச்சருக்கு தரவேண்டிய பாதுகாப்பு தனக்குத் தரவேண்டிய கட்டுப்பாடு அரசுக்கு இருந்தும் தனக்கு [illegible] பாதுகாப்புதன்னும் வழங்கப்படவில்லையென்றும் குறை கூறியுள்ளார்.

தான் இதுபற்றி மீண்டும் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்திருப்பதாகவும், தான் எதிர்கொண்டுள்ள பாரதூரமான நிலைமையை ஜனாதிபதி கூட அறிந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு மத்தியில் தன்னை சாதாரணமாக விட்டிருப்பது ஏமாற்றமடைவதோடு அரசின் நிலை குறித்து கவலையடைவதாகவும் திருமதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

—கே-இ

அவமானச் சின்னமாக பிரேமாவின் சிலை

(கொழும்பு)

கொழும்பு — ஹவ்ஸ்டேசப்பில் நிறுவப்பட்டுள்ள திரு. பிரேமதாசாவின் சிலை ஒரு அவமானச்சின்னமாக விளங்குவதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிலை பற்றிய புதிய அபிப்பிராயபேதங்கள் இப்போது எழுந்துள்ளன.

திரு. பிரேமதாசவின் சிலை திறப்பு விழாவின்போது அவரது குடும்ப அங்கத்தவர் எவருமோ அல்லது ஜனாதிபதி விஜேதுங்காவோ சமூகமளிக்காதது அன்று பலருக்கு ஏமாற்றமளித்தது.

மறைந்த ஜனாதிபதிபோல அவரது சிலை அமைந்திராததினால் அவரது குடும்பத்தினர் கோபமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் எப்போதும் பேசும்போது தனது வலது கரத்தை உயர்த்தி விரல்களை குறிவைத்துப் பேசுவார் ஆனால் இச்சிலையில் இடது கையை உயர்த்தி பேசுவதாக அமைந்துள்ளது என்று குறைபட்டுக் கொள்கின்றனர்.

சிலை திறப்பு விழாவை ஒழுங்கு செய்தவர்கள், அதை குடும்ப அங்கத்தவர் எவரையும் அழைக்கும் நாகரீகம் கூட தெரியாதவர்களாக இருந்ததாகவும் இதனாலேயே தாங்கள் சிலை திறப்பு வைபவத்தில் கலந்து கொள்ளவில்லையெனத் திரு. பிரேமதாச குடும்பத்தினர் வைபவ விழாவில் கலந்து கொள்ளாதது குறித்து கருத்து தெரிவித்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

தேவை

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் திறமை உள்ளவர்கள் தேவை.

முழுமையான விபரங்களுடன்
16-5-94-ம் திகதிக்கு முன்னர்
விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
மே/பா ஈழநாடு லிமிட்டெட்,
த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

(ஏ-4069)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பதவி வெற்றிடம்

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தரம் III பதவிக்கு பொருத்தமான ஆண் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994-06-03ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்:

ரூபா 2890 — 10 X 55 — 7 X 65 — 3895/- (மாதமொன்றுக்கு)

தகைமைகள்:

சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரீட்சையில் சித்தி பெற்று சித்தி பெற்றதிலிருந்து குறைந்த பட்சம் மூன்றாண்டு அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது:

40 வயதிற்கு மேற்படலாகாது.

தெரிவு:

உளச்சார்பறியும் தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகியவற்றின் மூலம்.

மேற்குறித்த சம்பளத்துடன் 1994 டிசம்பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சத வீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

9/93 இலக்க 1993 மே 12ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு ஏற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

மாதாந்தப் பல்கலைக்கழகப் படியாக 500/- ரூபா செலுத்தப்படும்.

மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியாக 260/- ரூபா செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் இப்பல்கலைக்கழக சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவை செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். படிவங்களையும் இதர விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியுடைய காசுக்கட்டளை / தபாற்கட்டளை 23 X 10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு விண்ணப்பிக்க முடியும். அவ்வாறான விண்ணப்பதாரர்களின் வயதெல்லை 70 ஆகும். ஓய்வு பெற்றவர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் ஓய்வு பெற்ற போது கடைசியாகப் பெற்ற சம்பளம் செலுத்தப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்கள் குறிப்பிடப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1994-05-07. (ஏ-4071)

உ

1ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

கிருஷ்ணர் வேலாயுதம்பிள்ளை

ஆதி: 23-8-1919 அந்தம்: 23-4-1993

திதி: 11-5-1994 புதன்கிழமை

மீளா உலகு நீங்கள் சென்று
நாளாகி இன்று ஆண்டு ஒன்று
ஆளாக்கி வைத்த உம் நினைவின்
மாளாத் துயரில் நாம் இங்கே;

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"[illegible]",
டச்சு வீதி, சித்தங்கேணி.

(இ 1017)

மணிவாக்கு

மூடனின் மனது அவன் வாயில் இருக்கிறது. அறிவாளிகளின் வாய் அவர்களின் மனதில் இருக்கின்றது.

– பிராங்ளின்

நமது நோக்கு

பயங்கரவாதம் எங்கே?

வடக்கிலே பயங்கரவாதம் எனச் செபித்துக் கொண்டிருந்த ஜனாதிபதிக்கு, பயங்கரவாதம் தெற்கிலே, நேரிலே காட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றது!

பயங்கரவாதத்தின் பின்னணி மெல்லத் தலை காட்டத் தொடங்கியுள்ளது.

சொய்சா குடும்பத்தை மீதான பொலிஸ் விசாரணைகளை நிறுத்துமாறு நெருக்குதல்கள் கொடுக்கப்படுவதாகச் செய்திகள் வருகின்றன.

விரும்பத்தகாத சம்பவங்களுக்கு அரசியல்வாதிகள் பின்னணியில் இயங்குவது வெளிவரத் தொடங்கியுள்ளது.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு இலாபம் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்?

ஐ. தே. க. விற்குள் பிளவு என்றதும் பல பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னணிகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, இழைக்கப்பட்ட கொடூரங்களைத் தவிர்ப்பதற்கு, தமக்குத் தாமே பாதுகாப்புத் தேடுவதற்கும் தமிழர்கள் போராடுவதைப் பயங்கரவாதம் என முத்திரை குத்தி உலகிற்குப் பிரசாரம் செய்து வந்தார்கள்.

ஆனால், பயங்கரமான பயங்கரவாதம் யாரால், ஏன் கட்டவிழ்த்துவிடப்பட்டது என்பன போன்ற சங்கதிகள் வெளிவரத் தொடங்கிவிட்டன.

பதவி விலக முன்வந்த நாடாளுமன்ற உறுப்பினருக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இன்னொரு செய்தி வந்துள்ளது.

கொலைப் பயமுறுத்தல் என்பது ஏதோ புதிய செய்தியா?

கொலைப் பயமுறுத்தலின் சாட்டு எத்தனை அப்பாவித் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்.

கொலைப் பயமுறுத்தல் மாத்திரமா நடந்தது? 1983 முதல் 1993 வரை, வடக்கு கிழக்கில் 17,721 தமிழர்கள் உயிரிழந்தார்கள் என இலண்டனிலிருந்து வரும் "தமிழ் நேசன்" என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

கர்மல் மடத்திலே, காணாமற் போனவர்கள், பாதுகாப்புப் படையினரின் அட்டூழியங்கள் என்பன சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற நிறுவனங்களால் சுட்டிக்காட்டப்பட்டபோது அரசு தனது பிரசார உத்திகளால் மூடிமறைத்து, பிரசாரம் செய்துவந்தது.

ஆனால், தெற்கிலே தற்போது நடக்கும் அரசியல் நிகழ்வுகள் பயங்கரவாதத்தின் ஆணிவேர் எங்குள்ளது என்பதை விரைவில் உலகிற்குத் தெரியவைக்குமல்லவா?

கட்சியின் கட்டுப்பாட்டை பேண 'டி. பி' பகீரதப் பிரயத்தனம்

(கொழும்பு)

ஐ.தே.கவை தனது முழுக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி விஜயதுங்க பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாக கூறப்படுகிறது.

கட்சியின் செயலாளர் பதவியிலிருந்த திரு. சிறிசேன குரே ராஜினாமா செய்து புதிய செயலாளராக திரு காமினி விஜயசேகரா நியமிக்கப்பட்ட பின்னர் கட்சிக்குள் பிளவு மேலும் அதிகரித்திருப்பதாகக் கட்சியின் கட்டுப்பாடு சீர்குலைந்துள்ளதாம்.

திரு. காமினி திஸநாயக்காவை எம். பியாகவும் விடாமல் தொடர்ந்தும் இக்கவலையே உள்ளது. காமினியை எம். பியாக்க இதுவரை தேசிய பட்டியல் மூலம் நியமனமான எம். பிக்கள் எவரும் பதவி விலக முன்வரவில்லை. பதவி விலக முன்வருவோரும் எதிர்ப்புச் சூழலில் [illegible] தமது மனமாற்றமடைந்து விடுகிறார்களாம்.

இந்நிலையில் கட்சியைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சக்தி ஜனாதிபதி விஜயதுங்கவுக்கு இல்லாதுபோய்விடலாம் என்றும் நம்பப்படுகிறதாம். ஐ.தே.கவில் தற்போதைய பிளவு நிலை எதிர்க்கட்சிகளுக்கு பலத்த வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர். -இ

பிடிபட்ட 200 சிப்பாய்களில் 10 பேரே மீண்டும் கடமையில்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களில் பிடிபட்ட 200க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் மீண்டும் இராணுவ சேவையில் ஈடுபட மறுத்துவிட்டனராம்.

கடந்த இரு வருடங்களில் தப்பி ஓடிய சிப்பாய்களில் 200 பேர் மட்டுமே பிடிபட்டதாகவும் இவர்களில் 10 பேர் மட்டும் மீண்டும் கடமையில் ஈடுபட இணக்கம் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடமையின் போது தப்பி ஓடும் அல்லது லீவில் சென்ற பின் கடமைக்கு திரும்ப மறுக்கும் சிப்பாய்களினால் இராணுவ தலைமைப்பீடத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தப்பியோடிய பல சிப்பாய்கள் படையினர் போலவே ஏனைய சிப்பாய்களையும் தப்பியோடச் செய்கின்றனர் என அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து வருடத்தில் இராணுவத்திலிருந்து 17 000 திற்கும் மேற்பட்டவர்கள் தப்பி ஓடியதும் தெரிந்ததே. -சி

புலிகளின் சமாதான அழைப்பு அரசு தொடர்ந்து மௌனம்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுக்களை நடாத்துவதற்கு தாங்கள் எந்நேரமும் தயாராக இருப்பதாக தமிழ் அரசியல் அறிக்கை ஒருவர் மூலம் விடுதலைப்புலிகள் கடந்த இரு வாரங்களுக்கு முன் விடுத்த அழைப்புக்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க இன்னும் மௌனம் சாதிப்பதாக கொழும்பு பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

இதுபற்றி இப்பத்திரிகைகள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

வடபகுதிமீது பாரிய தாக்குதல்களை நடாத்துவதற்காக இராணுவம், கிழக்கிலிருந்து படைகளை வடக்குக்கு நகர்த்திவருவதுடன் அனைத்து ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்து தயார் நிலையில் இருக்கிறது.

நாட்டின் முக்கிய இரு தேர்தல்கள் நடைபெற இருப்பதினால் இந்த வேளையில் வடபகுதிமீதான தாக்குதல்களை நடாத்துவதா இல்லையா என்று அரசு ஒரு முடிவையும் எடுக்க முடியாது இருக்கிறது.

இதேவேளையில் விடுதலைப் புலிகளின் அறிவிப்புக்கு அரசு இதுவரை சாதகமான பதில் எதையும் தெரிவிக்காது மௌனமாக இருப்பதைப் பார்க்கும்போது அரசு தனது முன்னைய நிபந்தனையுடன் கூடிய பழைய நிலைப்பாட்டிலேயே இருப்பதாகத் தோன்றுகின்றது என்று தெரிவித்துள்ளன. வி-சி

தமிழர் அபிலாஷைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு சுபீட்சம் ஏற்படவேண்டும் என்றும் வடக்கு-கிழக்குப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கவேண்டும்.

இது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்லசந்தர்ப்பம். தமிழ் மக்களின் அபிலாஷைகளை எவ்வளவுக்கு நாம் பூர்த்தி செய்ய முடியுமென்று பார்க்கவேண்டும். சகல கட்சிகளும் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும். இந்தப் பிரச்சினை அரசியலுக்கு அப்பால் எடுத்துச் சென்று ஒத்துழைப்பு அளித்தால் இது சாத்தியமாகும். இன்று இவ்வாறு செய்யப்படாவிட்டால் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாத அளவிற்கு இது பெரிதாகிவிடும் என்றும் தெரிவித்தார்.

குருநாகல் மத்திய கல்லூரி விழா வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

1983 இனக் கலவரத்தின் பின்னர் இந்தப்பிரச்சினை பாரிய உருவத்தை எடுத்திருக்கிறது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன;

நாடாளுமன்றத் தெரிவுக் குழு கூட்டப்பட்டபோது இந்த கமிட்டி வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்கவில்லை. தமிழ் கட்சிகள் தெரிவுக் குழுவின் கருத்தை ஏற்க மறுத்தன. சமஷ்டி முறையிலான நிர்வாகத்தை சிபார்சு செய்தது. தமிழ் கட்சிகள் இணைப்பு இல்லாத நிலையை ஏற்க மறுத்தனர்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் முக்கிய பங்கேற்க வேண்டும். அரசியல் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாக அணுகக்கூடாது. இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டும். பேச்சுவார்த்தை மூலம் இதனைத் தீர்க்கத் தவறியதாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை உருவானது என்பதை நாம் மறுக்கமுடியாது.

என்னைப் பொறுத்த வரை தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் 8 மாதங்கள் பேசியும் பலன் கிடைக்கவில்லை; விடுதலைப் புலிகளுடன் 11 மாதங்கள் பேசினேன். ஆனால் திடீரென இப்பேச்சுக்கள் முறிவடைந்தன. இன்று நிலைமை மோசமாகிவிட்டது. புதிதாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் தோன்றியிருக்கிறது. புது முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும். நாட்டிலே இந்த நிலை இருப்பதினாலேயே எமது பொருளாதாரம் வளர்ச்சி காண்பதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நிவர்த்தி செய்கின்ற நடவடிக்கைகளை நாம் உடனடியாக எடுக்காவிட்டால் பாரதூர விளைவுகள் ஏற்படலாம். தேசியக் கட்சிகள் மீது பெரும் பொறுப்புக்கள் இருக்கின்றன. நாட்டின் நலனை முன்னிட்டு இக்கட்சிகளே வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். - சி

கூட்டுக் குப்பை சேர்த்திடு - அதை
கட்டுப் பணமாய் பார்த்திடு

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05-11 புதன் இரவு
08-01- குயிலோசை- "சுரண்டலைச் சுட்டெரிப்போம்" கிராமிய நிகழ்வு
08-20- ஏர்முனை- "என்னைப் பயிராக [illegible]"
8-30- செய்திகள்
08-40- நாடகம்- "விடிவு"
1994-05-12 வியாழன் காலை
07-02- மாவீரர் வணக்கம்.
07-15 விடுதலை கீதங்கள்
07-30- செய்திகள்
07-35- பத்திரிகைச் செய்திகள்.
07-40- விடுதலை கீதங்களின் தொடர்ச்சி.

இராசி பலன்

11 - 05 - 1994
புதன்கிழமை
(தமிழுக்கு சித்திரை 28)

பிரதமை இ. பி. 12 49 வரை, கார்த்திகை பி. இ 2-36 வரை. அமிர்தசித்த யோகம் இராகுகாலம் காலை 11-54 முதல் 1-24 வரை, சுப நேரம் காலை 4-24 முதல் 5-54 வரை, கார்த்திகை விரதம்.

மேஷம்: சக்திக்கு மீறிய செலவு பணவரவு, பாராட்டு.

இடபம்: சமயோசித நடவடிக்கை, காரிய சித்தி, பயணம்.

மிதுனம்: வீண் தகராறு, பணப் பற்றாக்குறை, அலைச்சல்.

கடகம்: மக்கள் பெருமை, மனமகிழ்ச்சி, நற்பணி.

சிம்மம்: தொழில் மேன்மை, மனஉறுதி, பிறர் உதவி.

கன்னி: வீண் தடை, கெட்ட சகுனம், வழிமாறுதல்.

துலாம்: உடல்நிலை கவலை, அமைதி குன்றல், தொழில் நஷ்டம்.

விருச்சிகம்: தாராள உதவி, குதூகலம், உறவினர் வருகை.

தனுசு: திருமண யோகம், தாய்வழி உறவு, புதிய வாய்ப்பு.

மகரம்: உறவில் விரிசல், அவச்சொல், காரியதாமதம்.

கும்பம்: தொழில் பாதிப்பு, கடன்படுதல், மனசஞ்சலம்.

மீனம்: சமாதானம், தொழில் லாபம், சுபகாரியம்.

ஜோஸ்யர்

'ஒப்சேவர்' ஆசிரியர் மீண்டும் கடமையில்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய "ஒப்சேவர்" ஆசிரியர் எச். டி. மகிந்தபால மீண்டும் அப்பதவியை ஏற்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றது.

ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவன தலைவர் செருமிறியேவுடன் கடந்த புதன்கிழமை இவரும் தனது ராஜினாமாவை சமர்ப்பித்து வெளியேறியிருந்தார்.

நிறுவனத்தின் புதிய தலைவர் சரத் அமுனுகமவின் வேண்டுகோளின் பேரில் கடந்த வெள்ளி இவர் மீண்டும் கடமையை ஏற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சே-வி

மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயமும் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயமும் இணைந்து நடாத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டி இம்மாதம் 13ந்திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு யாழ். [illegible] மைதானத்தில் நடைபெறும்.

வடக்கில் 15ம் திகதியுடன் வெப்பம் தணியும்

(கொழும்பு)

வடபகுதியில் கடந்த சில தினங்களாக நிலவும் கொடூர வெப்பம் எதிர்வரும் 15ம் திகதியுடன் குறைவடைந்துவிடும் என கொழும்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் தற்போது வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள தாழ் அமுக்கத்தின் காரணமாக ஆங்காங்கு மழை பெய்ய ஆரம்பித்துள்ளதாகவும் இன்னும் சில தினங்களில் மிதமான காலநிலை பல பகுதிகளிலும் நிலவும் எனவும் அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

(க-)

சுவிஸைவிட்டு வெளியேறுமாறு இலங்கை தமிழருக்கு கடிதம்!

(பேர்ன்)

நாட்டைவிட்டு வெளியேறுமாறு சுவிஸ்லாந்திலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு சுவிஸ் அரசு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர்களுக்கு வெவ்வேறு வகை ஆணைகள் சுவிஸ் அரசினால் அனுப்பி வைக்கப்படுகின்றது.

சிலருக்கு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறும் சிலருக்கு மூன்று மாதங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் சிலருக்கு நாட்டைவிட்டு வெளியேறுவது தொடர்பாக வழக்குத் தாக்கல்செய்யப்படும் என்ற சலுகையுடன் கடிதங்கள் அரசினால் அனுப்பப்படுகின்றன.

அடுத்த சில மாதங்களில் ஒரு தொகுதி அகதிகள் சுவிஸ்லாந்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. -நி

● ஐ. தே. க.விடமும், சு. க.விடமும்

இனப்பிரச்சினை தீர்ப்பதற்கு திட்டங்கள் எதுவும் இல்லை

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கையில் உள்ள இருபெரும் அரசியல் கட்சிகளான ஐ. தே. க விடமும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிடமும் உருப்படியான திட்டங்கள் ஏதும் கிடையாது. இதை அறியாமல் கொழும்பிலுள்ள சில தமிழ்கட்சிகள் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நாடி ஓடித் திரிவது புதிராகவே இருக்கின்றது என்று அரசியல் பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேற்படி இருபிரதான கட்சிகளும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில், மற்றைய கட்சிகள் அக்கறைபற்றுஇல்லாததாக குற்றஞ்சாட்டுகிறார்களே தவிர தம்மிடம் என்ன தீர்வுத் திட்டம் இருக்கிறது என்பதை இதுவரை திட்டவட்டமாகக் கூறுவதற்கு முன்வரவில்லை.

உரிய நேரத்தில் அவை வெளியிடப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் கூறிவருகின்றனர். இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர் மங்கள முனசிங்க தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கூட இக்கட்சி தமது தீர்வுத்திட்டத்தை சமர்ப்பிக்கவில்லை.

தெரிவுக்குழுவிடம் இந்த தமிழ்க்கட்சிகள் முன்வைத்த நாலு அம்சக்கோரிக்கைகளைக் கூட ஏற்கமுடியாது என்று சுதந்திரக்கட்சியினர் கூறிவிட்டனர்.

எதிர்வரும் தேர்தல்களில் சுதந்திரக்கட்சியுடன் இணைந்து கொண்டால் வெற்றிவாய்ப்பைப்பெற்று, பதவிகளைப் பெறுவதுதான் இவர்களின் தற்போதைய முக்கிய நோக்கமாகும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (வி-மி)

அவமானச்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிரேமதாசாவின் மாளிகைஅம்பலம்போல அமைந்த தோட்டத்தில் புதிய சிலையொன்றை திறந்த அமைச்சுடன் அமைக்கப்போவதாகவும், இப்போது அமைக்கப்படுகின்ற ஜூல் ஸ்டேப்பிளுக்கு செய்த 25 லட்சம் ரூபாவும் வீண் விரயம் செய்ததுதான் மிச்சம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (கே-வி)

ரூ. 85 லட்சம் செலவில் இரு அமைச்சர்களுக்கு கார்

(கொழும்பு)

இரு அமைச்சர்களுக்கு 85 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கார்கள் இறக்குமதி செய்யப்பட இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு அமைச்சருக்கு 55 லட்சம் ரூபா பெறுமதியான காரும் இன்னொரு அமைச்சருக்கு 30 லட்சம் ரூபா காரும் இறக்குமதி செய்வதற்குப் பணம் செலுத்தப்பட்டுள்ளதென்று கூறப்படுகிறது. -ம

திருநெல்வேலி
ஸ்ரீ நீலாலதாக்ஷி ஸமேத
காயாரோகண சுவாமி
தேவஸ்தானம்
பூங்காவன
உற்சவசவம்
காலம்: 11-05-1994 (இன்று)
புதன்கிழமை மாலை 7 மணி
மாணவர்களுக்காக நடைபெற்ற சமய
அறிவுப் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கான
பரிசளிப்பு விழா
ஆலயவழிபடுநர்சபைத் தலைவர்
எஸ். நாகராசா
பரிசில்களை வழங்கி கௌரவிப்பார்
சிறப்புரை: சிவனருட்செல்வர்
ஆறு. திருமுருகன் (பி.ஏ.)
(ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
நாதஸ்வரக்கச்சேரியில் முன்னணி நாதஸ்வர
கலைஞர்கள் பங்குகொள்வர்
இசை நிகழ்ச்சி
★ ராஜன் இசைக்குழுவினர் ★
நிகழ்ச்சியில் அனைவரும் பங்குகொண்டு
சுவாமிகளின் இஷ்டசித்திகளைப் பெறுமாறு
வேண்டுகிறோம்
— தேவஸ்தானம்
திருநெல்வேலி
(ஏ-4072)

மகளிர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் "சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் நடவடிக்கைகளில் பெண்கள் பங்குபற்றல்" என்ற விடயம் தொடர்பான ஓர் கருத்தரங்கை இன்று பி.ப 2-00 மணிக்கு கொக்குவில் காந்திஜீ சன சமூக நிலைய மண்டபத்தில் நடத்தவுள்ளது. -நி

குண்டுவெடிப்பினால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொறட்டுவ கரையில் சுமார் 500 வீடுகளை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டுள்ளனராம்.

கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு அதில் பலர் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் சிலர் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-வி)

சிறிசேன கூரே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து சதியில் ஈடுபட்டதாக 'ராவய' பத்திரிகையில் வெளிவந்த செய்தியை தொடர்ந்து ஜனாதிபதி பல விசாரணை உத்தரவுகளை விடுத்துள்ளாராம்.

இதன் ஒரு கட்டமாகவே சிறிசேன கூரேயின் ஒவ்வொரு நடவடிக்கையும் கண்காணிக்கப்படுகிறது. இதேபோன்று மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவின் நடவடிக்கையும் கண்காணிக்கப்பட்டு வருகிறதாக செய்திகள் தெரிவிக்கின்றன. -இ-வி

வடக்கு-கிழக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும், மாநகரசபையில் அங்கம் வகிக்கும் ஐ.தே.கவின் உறுப்பினர்கள் உட்பட அனைவரும் தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கு மாறாக நடந்து கொள்ளமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் சிவில் நிர்வாகம் முற்று முழுதாக நடைபெறுகிறது என்று கூறமுடியாது. மேயர் பதவியை ஏற்று பல வாரங்களாகிவிட்ட போதிலும் எனது அலுவலகத்திற்கோ அல்லது எனது இல்லத்திற்கோ இதுவரை தனியான தொலைபேசி வசதிகூட ஏற்படுத்தித்தரவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். -நி

இந்திய-இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைவாக வழங்குவதும் சாத்தியமில்லை. ஏனென்றால் அதைவிட அதிகமாக வழங்குவதை பெரும்பான்மை மக்கள் விரும்ப மாட்டார்கள். இதேவேளை அதை விடக் குறைவாக வழங்குவதையும் வடக்கிலுள்ள தமிழர்கள் ஏற்க மாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

ஐ தே.க மேயர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடும் இந்த மேயர் அனுமதியும் மீறி வெளிநாடு சென்றுள்ளாராம்.

தனது அனுமதியில்லாமல் வெளிநாடு சென்றதற்கான காரணத்தை அடுத்த 14 நாட்களுக்குள் அறிவிக்குமாறு மேற்படி மேயரிடம் ஜனாதிபதி விளக்கம் கேட்டுள்ளார். —இ-வி

சொத்தி உபாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீர்கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றவளவில் சந்தேகநபர் ஒருவரை சொத்தி உபாலி கடத்தியதாகவும் அவர் பொலிஸாரால் தேடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது (இ)

ஐ.தே.க,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தரப்பிலுள்ள ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு எதிரான கோஷ்டி ஒன்று ஜனாதிபதியை எந்த வேளையிலும் கொலை செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டியிருந்தது. ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் அதிகார இழுபறியின் உச்சகட்டமாக இந்தக் கொலை முயற்சி மேற்கொள்ளப்படவிருந்தது எனவும் தெரிவித்துள்ள மேற்படி பத்திரிகை இந்தக் கொலைமுயற்சி பற்றிய விபரங்களை இரகசியப் பொலிஸார் அரசுக்குத் தெரிவித்திருப்பதாகவும் பாதுகாப்புப் படையின் தகவல் அறிந்த வட்டாரங்களை ஆதாரம் காட்டி குறிப்பிட்டுள்ளது.

கடந்த மே முதலாம் திகதி கொழும்பில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு உருவச் சிலை ஒன்றைத் திறந்து வைக்கும் வைபவத்தில் ஜனாதிபதி கலந்து கொள்வதற்கு ஏற்பாடாகியிருந்தது.

இந்தக்கொலை முயற்சி பற்றி இரகசியப் பொலிஸார் அவருக்குத் தகவல் கொடுத்ததும் இறுதி நேரத்தில் இந்த வைபவத்தில் கலந்து கொள்வதை ஜனாதிபதி ரத்துச்செய்து விட்டார்.

கடந்த மே தினத்தன்று ஜனாதிபதி விஜேதுங்க கொலை செய்யப்பட்டிருந்தால் இதுவரை ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலர் பதவியை வகித்து வந்த சிறிசேன கூரே கட்சியினதும் அரசினதும் அதிகார நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றும் ஒரு முக்கிய புள்ளியாகியிருப்பார் என ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் தமது பத்திரிகைக்குத் தெரிவித்ததாகவும் அந்தசிங்களப் பத்திரிகை மேலும் குறிப்பிடுகின்றது. இ-வி

ஐ.தே:க. எம்.பிக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை பெற்று வருகிறார்களாம்.

தேசிய பட்டியல் மூலம் ஐ.தே.க.வின் எம். பியாக தெரிவு செய்யப்பட்டவரை பதவி துறக்கச் செய்து அவ்விடத்திற்கு திரு. காமினி திஸாநாயக்கா திருமதி ஹேமா பிரேமதாஸா மற்றும் சிலரை நியமிக்க ஜனாதிபதி விஜயதுங்க கடும் முயற்சியை மேற்கொண்டு வருகிறார்.

தலா 26,000 ரூபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலர் சிறிசேன கூரேயிடம் திருமதி ஹேமா பிரேமதாசா கையளித்தார்.

இந்த பொதிகளுக்கு என்ன நடந்தது என்பதை விசாரித்துத் தருமாறு ஐ.தே.க. எம்.பி [illegible] ஐ. தே. க பொதுச்செயலர் டாக்டர் காமினி விஜேசேகரவிடம் விசேஷ வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (இ-வி)

காமினியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் மூலம் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் இந்த முயற்சி தோல்வியில் முடிவுற்றதாக தெரிவிக்கப்பட்டது.

ஐ தே. கவின் தேசியப்பட்டியல் மூலம் தெரிவானவர், [illegible] ராஜினாமா செய்யும்படி ஐ. தே. க. பொதுச்செயலர் மூலம் கேட்கப்பட்டதாம், சுமார் ஒருமணித்தியாலம்வரை இது நீடித்ததாம்.

ஜனாதிபதியை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தியில் எதுவித உண்மையுமில்லை எனவும் திரு கூரே தெரிவித்திருப்பதுடன் இன்னொரு ஒரு தகவல் தாம் 'ராவய'வுக்கு வழங்கவில்லை என சி. ஐ. டி.' பிரிவின் தலைவர் அமரசேன ராஜபக்ஸ தம்மிடம் தொலைபேசி மூலம் கூறியதாகவும் இச்செய்திக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என அவர் மறுத்துவிட்டதாகவும் இதேபோன்றே பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி. ஐ. ஜி. ராஜபக்ஸவும் இச்செய்திக்கும் தங்களுக்கும் தொடர்பில்லைஎனவும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவிடமும் கூறியுள்ளாராம்.

அமைச்சர் கூரேயும், லக்கி அல்கமவும் சந்தித்தது உண்மை எனவும் அதற்கான காரணம் வேறு எனவும் கூறப்பட்டுள்ளது. இதுபற்றி லக்கி அல்கம கூறுகையில், நான் இதை கத்தியுள்ளவன் எனத் தெரிவித்தார்.

இதுவரை இச்செய்திகுறித்து சி ஐ டி. பொலிஸார் 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவனை சந்திக்கவுமில்லை செய்தியின் உண்மை குறித்து விளக்கம் கேட்கவுமில்லையாம். மேற்படி குற்றச்சாட்டு இரு முக்கியஸ்தர்களுக்கு எதிராகவுள்ளது. எனினும் சி. ஐ. டி. பொலிஸார் இதுகுறித்து எதுவித சலனமுமின்றியே உள்ளனர். இது ஏன் என்று அரசியல் ஆய்வாளர்கள் மட்டத்தில் கேள்விகளை எழுப்பியுள்ளது.

இதுபற்றி 'ராவய' ஆசிரியர் கூறுகையில்; மேற்படி செய்தியை சில குறிப்பிட்ட சி. ஐ. டி.யினரே தந்ததாகவும், கட்சியிலிருந்து சிறிசேன கூரேயை அகற்ற மேற்கொள்ளப்படும் ஒருவகை முயற்சியாக இது இருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் செய்தி கடந்த வாரம் இராஜதந்திரிகள் மட்டத்தில் பரவலாக அடிபட்ட போதும் எவருமே இதனை பாரதூரமானதாக எடுத்துக்கொள்ளவில்லை எனினும் மே தினத்தன்று பிரேமாவின் பிறப்பு விழாவில் ஜனாதிபதி விஜயதுங்க கலந்து கொள்ளாததால் இச்சதிச் செய்தியில் உண்மை ஏதும் இருக்கலாம்என பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள் என 'சண்டே டைம்ஸ்' கூறியுள்ளது. -இ-வி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number 8/16338/N